முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள்: 22.01.2026 , அ.வ.எண். 76/2012 , வா.சா.1. சண்முகம், த/பெ. அய்யாசாமி

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் முதல் விசாரணை**

1) என்னிடம் காட்டப்படும் ஆவணம் வரதனூர் கிராமத்தின் வரைபடம் ஆகும். மேற்படி வரைபடம் **வா சா ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வா சா ஆ 13 ஆவணத்தில் நத்தம் பழைய புல எண்.97 என்பது நத்தம் புதிய புல எண்
243 ஆக மாறியுள்ளது. சிட்டாப்படி புல எண். 243/12 ஆகும்.

**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) வா சா ஆ 13 ஆவணம் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நீரோடை எங்களது தோட்டத்தை ஒட்டி செல்வதை காண்பிப்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். வா சா ஆ 13 ல் குறிப்பிட்டுள்ள எண்கள் என்ன என்றால் காலை எண்கள் குறிப்பிடப்பட்டுள்ளது அதில் எங்களது காலை எண் 96 ம் உள்ளது. நத்தம் பழைய புல எண்.97 எத்தனை உட்பிரிவுகளாக பிரிந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நத்தம் பழைய புல எண்.97 என்பது காலை எண்.243/1 என ஆரம்பித்து 243/15 வரை பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2) மேற்படி ஆவணம் பி வா சா ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா பிராது ஏ அட்டவணை சொத்து விவரத்தில் 96/2 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன் அளவு 4 1/2 ஏக்கர் ஆகும். வாசா ஆ 2 ல் 1 ஹெக்டேர் 87 ஏர்ஸ் என்று உள்ளது. ஏக்கரில் 4.62 செண்ட் என்றால் சரிதான். அதனால் ஏ அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரம் தவறு என்றால் சரியல்ல. ஏ அட்டவணை சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தா சுப்பேகவுண்டருக்கு பாத்தியப்பட்டது.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

சுப்பேகவுண்டருக்கு யார் யார் வாரிசுகள் என்றால் எனது அப்பா, சிவகாமி , அருந்ததி, பொன்னம்மாள், ராஜேஸ்வரி, இன்னொரு நபர் பெயர் சரியாக ஞாபகமில்லை.

3) எனது தாத்தா சுப்பே கவுண்டரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரியாக ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் பாக பாத்தியதை விடுதலை பத்திரம் யார் யாருக்கிடையே ஏற்பட்டது என்றால் எனது அம்மா, எனது தங்கை மகேஸ்வரிக்கு இடையே ஏற்பட்டது. 19.10.2017 ம் ஆண்டு நெகமம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1962/2017 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் **பி வா சா ஆ 4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் பட்டா என் பெயரில் உள்ளது என்றால் சரிதான் மேற்படி பட்டா எண்.1065 **பி வா சா ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) பி வா சா ஆ 4 ஆவணத்தின் படி எனக்கு 15 ஏக்கர் 42 செண்ட் உள்ளது என்றால் சரிதான், அதில் 96/2 தாவா ஏ அட்டவணை சொத்து உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி ஆவணத்தில் 96/2 ன் எல்லைகளில் கிழபுறத்து எல்லையாக 97 காலைக்கு மேற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் 243/12 காலை என்று எவ்வித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். பி வா சா ஆ 4 ல் 89/ஏ 3 காலை வருகிறதா என்றால் வருகிறது. அதில் க.ச.எண். 30 கிழமேல் ரோட்டிற்கும் தெற்கு என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் மேற்படி காலை என்னுடைய சொத்திற்கு தொடர்பில்லாதது ஆகும்.

5) மேற்படி ஆவணத்தில் பள்ளத்திற்கு தெற்கு என்று குறிப்பிடவில்லை

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி

என்றால் சரிதான், ஆனால் வழக்குச்சொத்திற்கும் க. ச. எண்.89 ற்கும் எவ்வித தொடர்பும் இல்லை. பி வா சா 4 ன் படி எத்தனை வீடுகள் உள்ளன என்றால் தொழில் செய்வதற்காக ஒரு வீடு 1000 சதுர அடியில் உள்ளது. மேற்படி வீட்டில் கோழிப்பண்ணை வைத்துள்ளோம் என்றால் சரிதான். பி வா சா ஆ 4 ல் குறிப்பாக காலை எண் குறிப்பிட்டு வண்டித்தடம் இல்லை என்றால் சரிதான். மாமூல் தடங்களை நாங்கள் பயன்படுத்தி வருகிறோம்.

6) 243/12 ல் வண்டித்தடம் இல்லாமல் தான் எங்களுக்கு எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்றால் இது நாள் வரை நாங்கள் மேற்படி வண்டித்தடத்தை 80 ஆண்டுகளாக பயன்படுத்தி வருகிறோம் அதைத்தவிர வேறு வண்டித்தடம் எங்களுக்கு கிடையாது. கிழமேல் ரோட்டிலிருந்து தெற்கு நோக்கி வரும் வண்டித்தடம் உள்ளது என்றும் அதை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. பி அட்டவணையில் வண்டித்தடத்தின் பரப்பளவு எவ்வளவு என்றால் தோராயமாக 16 அடி அகலம் இருக்கும். பரப்பளவு தெரியாது, நீளம் எவ்வளவு என்றால் தெரியாது. நான் வண்டித்தடத்தின் நீள, அகலம் குறிப்பிடாததால் சொத்து விவரம் தவறானது என்றால் சரியல்ல.

7) 243/12 ல் எனக்கு எவ்வித பாத்தியதையும் இல்லை என்றும் இந்த வழக்கை தாக்கல் செய்து புதியதாக வண்டித்தடத்தை ஏற்படுத்துவதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா சா ஆ 13 வண்டித்தடத்திற்கானது அல்ல என்றால் சரியல்ல. அதனால் தாக்கல் செய்துள்ள தாவா பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–(R. சுஜாதா)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி